# உலகத் தமிழ்க் கல்வி மாநாடு

# சிறப்பு மலர்


தொகுப்பாசிரியர்கள்

செந்தமிழ்த் தேனீ

**இரா. மதிவாணன்,**

செயலாளர்,

மாநாட்டு ஏற்பாட்டுக் குழு.

**வி சு துரைராசா,**

ஆய்வரங்கக் குழுத் தலைவர்,

உலகத் தமிழ்க் கல்வி மாநாடு.



வெளியீடு

**உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்**

**International Movement for Tamil Culture**

2100 Ellesmere Road, Suite 105, Toronto,

Ontario M1H 387 Canada.

| | | |
|---|---|---|
| ©உரிமை | : | உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்<br>International Movement for Tamil Culture |
| தலைப்பு | : | உலகத் தமிழ்க் கல்வி மாநாட்டு சிறப்பு மலர் |
| உள்ளடக்கம் | : | கட்டுரைகள், கவிதைகள் |
| தொகுப்பாசிரியர்கள் | : | செந்தமிழ்த் தேனீ இரா. மதிவாணன்<br>செயலாளர், மாநாட்டு ஏற்பாட்டுக் குழு<br><br>திரு. வி சு துரைராசா<br>கல்விப் பொறுப்பாளர், உ.த.ப.இ. |
| பதிப்பு | : | முதல் பதிப்பு<br>(தி.வ.2043) - ஆவணி (ஆகஸ்டு 2012) |
| அளவு | : | 28 x 21.5 செ.மீ. |
| பக்கங்கள் | : | 160 |
| மலர் உருவாக்கம் | : | உலகத் தமிழர் பதிப்பகம்<br>4 சௌராட்டிரா நகர் 7ஆம் தெரு,<br>சூளைமேடு, சென்னை - 600 094.<br>பேசி : 00 91 9444 111 951<br>0091 44 - 4553 8163<br>Email : eramathi@gmail.com |
| வெளியீடு | : | உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்<br>International Movement for Tamil Culture<br>2100 Ellesmere Road, Suite 105,<br>Toronto, Ontario M1H 387 Canada. |

# இலங்கையில் தமிழ் கற்றல் கற்பித்தலில் எதிர்நோக்கும் சிக்கல்களும் தீர்வுகளும்

**ஆ. நித்திலவர்ணன்,** விரிவுரையாளர், கல்வியியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், திருநெல்வேலி

**ஆய்வுக்கான அறிமுகம்**

தென்னாசியாவில் எழுத்தறிவு வீதம் உயர்ந்தளவில் கொண்ட நாடு இலங்கையாகும். இலங்கை சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள் மற்றும் பறங்கியர் ஆகிய பல்லினத்த வர்கள் வாழும் நாடாகும். இவர்கள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளைப் பேசுகின்றனர். முப்பது ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்ற உள்நாட்டு யுத்தத் தினால் இலங்கையின் கல்வித் துறையும் அதிகளவிலான பாதிப்புகளுக்கு உள்ளானது. ஆரம்பக் கல்வி முதல் பல்கலைக்கழகம் வரை இலவசக்கல்வி வழங்கப்படு கின்றது.

பாடசாலைக் கல்வியைப் பொறுத்தவரை தரம் 1 தொடக்கம் தரம் 13 வரையிலான வகுப்புகளில் தமிழ் ஒரு பாடமாகக் கலைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இவை தவிர இலங்கையில் முன் பள்ளிகளிலும் மற்றும் பல்கலைக் கழகங்களிலும் தமிழ் போதிக்கப்படுகின்றது. இந்தப் பின்னணியில் தற்கால இலங்கையில் தமிழ் கற்றல்-கற்பித்தலில் பல்வேறு பிரச்சினைகள் எதிர்நோக்கப்படு கின்றன. அண்மைக்காலத் தமிழ்ப்பாட பொதுத் தேர்வு முடிவும் மாணவர்களின் வீழ்ச்சிப்போக்கை எடுத்துக்காட்டு கின்றன.

**அட்டவணை -1**

கல்விப் பொதுச் சாதாரணத்தரத் தேர்வில் 'தமிழ் மொழியும் இலக்கியமும்' என்ற பாடத்தில் மாணவர்களின் அடைவு மட்டம்

| ஆண்டு | தோற்றியோர் | சித்தி வீதம் |
|---|---|---|
| 2008 | 57864 | 75.05% |
| 2009 | 53891 | 77.10% |
| 2011 | 60149 | 78.20% |

(மூலம் : இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்)

**அட்டவணை - 2**

கல்விப் பொதுச் சாதாரணத் தரத் தேர்வில் தெரிவுப்பாடமான 'தமிழ் இலக்கிய நயம்' என்ற பாடத்தில் மாணவர்களின் அடைவுமட்டம்

| ஆண்டு | தோற்றியோர் | சித்தி வீதம் |
|---|---|---|
| 2008 | 18350 | 65.26% |
| 2009 | 18375 | 72.27% |
| 2010 | 19581 | 66.01% |
| 2011 | 21699 | 63.68% |

(மூலம் : இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்)

**அட்டவணை - 3**

கல்விப் பொதுச் சாதாரணத் தர (உயர்தர)த் தேர் வில் 'தமிழ்' என்ற பாடத்தில் மாணவர்களின் அடைவு மட்டம்


| ஆண்டு | தோற்றியோர் | சித்தியடைந் தோர் வீதம் | சித்தியடை யாதோர் வீதம் |
|---|---|---|---|
| 2008 | 16919 | 89.86% | 10.14% |
| 2009 | 16706 | 81.47% | 18.53% |
| 2010 | 19576 | 76.72% | 23.28% |

**இலங்கையில் தமிழ் கற்றல் - கற்பித்தலில் எதிர்நோக்கும் பிரச்சினைகள்**

**1. கலைத்திட்டம் தொடர்பான பிரச்சினைகள்**

இலங்கையில் தமிழ் கற்றல் - கற்பித்தலில் கீழ்க்காணும் நான்கு பிரச்சினைகளை எதிர்நோக்கலாம்.

1. கலைத்திட்டம் தொடர்பான பிரச்சினைகள்
2. ஆளணியினர் தொடர்பான பிரச்சினைகள்
3. கற்பித்தல் முறை தொடர்பான பிரச்சினைகள்
4. வளங்கள் தொடர்பான பிரச்சினைகள்



*ஆனந்தமயில் நித்திலவர்ணன், யாழ்ப்பாணம் பொலிகண்டியைச் சேர்ந்தவர். தற் பொழுது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்வியியல் துறையில் விரிவுரையாளராகக் கடமை யாற்றுகின்றார். இவரது தந்தையார் த. ஆனந்தமயில் இலங்கையின் புகழ்பெற்ற சிறுகதை எழுத்தாளராவார். நித்திலவர்ணன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மற்றும் இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம் ஆகியவற்றின் கல்விமாணிப் பட்டதாரியாவார். அத்துடன் இவர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலிருந்து, முதுகல்விமாணிப் பட்டத்தையும் பெற்றுக் கொண்டுள்ளார். ''இலங்கையில் கல்வியின் நவீன போக்குகள்'' என்ற கல்வியியல் நூலையும் ''புத்தாக்க செருகேடு'' என்னும் ஆக்க இலக்கிய நூலையும் எழுதி வெளியிட்டுள்ளார். வினைத்திறன்மிக்க இளம் கல்வி ஆய்வாளரான இவர் ஆய்வுக் கட்டுரைகளை எழுதி வருகின்றார்.*

கலைத்திட்டம் தொடர்பான பிரச்சினைகள்

இலங்கையில் தரம் - 1 தொடக்கம் தரம் - 5 வரையிலான வகுப்புக்களுக்குத் 'தமிழ்' என்ற பாடமும், தரம் - 6 தொடக்கம் தரம் - 11 வரையிலான வகுப்புக்களுக்குத் 'தமிழ்மொழியும் இலக்கியமும்' என்ற பாடமும் கட்டாயப் பாடமாகக் கலைத்திட்டத்தில் உள்ளன. இதற்கு மேலதிகமாகத் தரம் - 10 மற்றும் தரம் - 11 ஆகியவற்றுக்குத் தெரிவுப்பாடமாகத் 'தமிழ் இலக்கிய நயம்' என்ற பாடமுள்ளது. உயர்தரக் கலைப்பிரிவுப் பாடங்களில் 'தமிழ்' ஒரு முதன்மைப் பாடமாகும்.

மேற்படி பாடங்களின் கலைத்திட்ட உருவாக்கம், ஆசிரியர் அறிவுரை, வழிகாட்டி, உருவாக்கம் மற்றும் ஆசிரியர் பயிற்சி என்பனவற்றுக்குப் பொறுப்பாக இருப்பது 'தேசியக் கல்வி நிறுவனம் ஆகும். பாடநூல் உருவாக்கம் மற்றும் பதிப்பித்தல் என்பன 'இலங்கைக் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின்' பணியாகும். இவ்விரு நிறுவனங்களும் இலங்கைக் கல்வியமைச்சின்கீழ்ச் செயற்படுகின்றபோதும், அவற்றுக்கிடையில் ஓர் இணக்கப்பாடின்மை காணப்படுகின்றது. இதன் விளைவால் பாடநூல்கள், ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகள் என்பனவற்றைத் தரமாகக் கொண்டு வருவதில் பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

மாணவர்களின் உடல் வயது, உளவயது என்பனவற்றுக்கேற்பக் கலைத்திட்டம் வடிவமைக்கப்படவில்லை. அத்துடன் கலைத் திட்டத்தில் குறுக்கான மற்றும் நெடுக்கான ஒன்றிணைப்பு குறைவாகவுள்ளது.

2. பாடநூலாக்கத்திலுள்ள பிரச்சினைகள்

இலங்கையில் பாட நூலாக்கத்தில் எல்லா ஆசிரியர்களும் ஈடுபட முடியுமெனினும் குறிப்பிட்ட சிலர் மட்டும் எழுத்தாளர் குழுவிலும், பாடநூலாக்கக் குழுவிலும் தொடர்ச்சியாக ஈடுபடுகின்றனர். பக்கச் சார்புகள் மற்றும் அரசியல் செல்வாக்குகள் காரணமாகத் தகுதியற்ற பலர் பாட நூலகத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதன் காரணமாகப் பாட நூல்கள் தரமற்றவையாகக் காணப்படுகின்றன.

இலங்கையின் சில பிராந்தியங்களைச் சேர்ந்த ஆளணியினர் பாடநூலாக்கத்திலிருந்து தொடர்ச்சியாகப் புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர். இதற்கு மேலதிகமாகப் பாடநூல்கள் தமிழர் மற்றும் முஸ்லிம்களின் கலாச்சாரங்களைத் திருப்திகரமாகப் பிரதிபலிப்பதிலும் தவறிவிடுகின்றன. தமிழ்ப் பாடநூல்களுக்குச் சிங்கள ஓவியர்கள் ஓவியம் வரைந்துள்ளார்கள்.

3. ஆசிரியர்கள் சார்பான பிரச்சினைகள்

தமிழ்ப் பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் போதிய பயிற்சிகள் அற்றவர்களாகக் காணப்படுகின்றனர்.

வேறு பாடத்தைப் பல்கலைக் கழகத்தில் முதன்மையாகக் கற்றவர்கள் பாடசாலைகளில் தமிழைக் கற்பித்தல்.

தற்கால உலக செல்நெறிக்குரிய நவீன கற்பித்தல் பயிற்சிகள் வழங்கப்படுவதில்லை.

தற்போது இலங்கையில் அமுலிலுள்ள 5S முறைக் கற்பித்தலைப் பின்பற்றாது, பாரம்பரிய முறைகளைக் கையாள்கின்றனர்.

ஆசிரியர்களிடம் வாசிப்புப் பழக்கம் குறைந்து செல்கின்றமை.

பல்கலைக் கழகங்களுக்கும் பாடசாலைகளுக்குமிடையில் நெருங்கிய தொடர்பின்மை.

4. கற்பித்தல் முறை தொடர்பான பிரச்சினை

தற்போது இலங்கையில் அமுலிலுள்ள 5S முறைக் கற்பித்தலானது எல்லாப் பாட அலகுகளையும் கற்பிக்கச் சிறப்பானது அல்ல.

5. மாணவர்கள் தொடர்பான பிரச்சினைகள்

க.பொ.த(உ/த) இலும், பல்கலைக் கழகத்திலும் தமிழை ஒரு பாடமாகத் தெரிவு செய்வது குறைவடைந்து செல்கின்றது.

மாணவர்களிடம் வாசிப்புப் பழக்கம் குறைந்து செல்கின்றமை.

தமிழ்ப் பாடம் தொடர்பான இணைப்பாட விதானங்களில் கலந்துகொள்ளும் ஆர்வம் குறைவடைந்து செல்கின்றது.

6. தேர்வுகள் தொடர்பான பிரச்சினைகள்

பாடசாலைத் தேர்வுகளிலும், பொதுத் தேர்வுகளிலும் வினாத்தாள்கள் சிறப்பாக, பாடம் தொடர்பான அனைத்து விடயங்களையும் உள்ளடக்கும் வகையில் தயாரிக்கப் படுவதில்லை.

வினாத்தாள்களில் எழுத்துப் பிழைகள் காணப் படுதல்.

பொதுத் தேர்வு வினாத்தாள்கள் முறையற்ற விதத்தில் முன்னரே வெளியாதல்.

தேர்வு வினாத் தாள்கள் தயாரிக்கும் பேராசிரியர்களே வினாக்களைக் கசியவிடுதல்.

பொதுத் தேர்வுப் பரீட்சகர்களின் பாட அறிவு, மதிப்பீட்டறிவு என்பன குறைந்ததாக இருத்தல்.

7. வளங்கள் தொடர்பான பிரச்சினைகள்

பாடநூல்கள் உரிய நேரத்துக்குப் பாடசாலைகளுக்குக் கிடைப்பதில்லை.

நீண்டகால யுத்தநிலை, பாடசாலைகளில் கற்றல்-கற்பித்தலுக்குத் தேவையான பௌதீக வளப் பற்றாக் குறையை ஏற்படுத்திவிட்டது.

பாடசாலைகளில் நூலக வசதி குறைவாகக் காணப் படுகின்றது.

8. தமிழ்ப் பாடம் தொடர்பான இணைப்பாட விதானங் களில் உள்ள பிரச்சினைகள்

தமிழ்த்தினப் போட்டிகளில் நடுவர்கள் பக்கச் சார் பாகச் செயற்படுதல்.

மாணவர்களைப் பயிற்றுவிப்பதற்குப் பயிற்சி பெற்ற ஆளணியின்மை.

**இலங்கையில் தமிழ் கற்றல் - கற்பித்தலில் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கான தீர்வுகள்**

மாணவர்களின் உடல் வயது உளவயது என்பன வற்றுக்கேற்பத் தமிழ்ப் பாடக் கலைத்திட்டம் வடிவமைக்கப் பட வேண்டும்.

தமிழ்ப் பாடக் கலைத்திட்டத்தில் குறுக்கான மற்றும் நெடுக்கான ஒன்றிணைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும்.

பாடநூலாக்கத்தில் திறமையானவர்கள் ஈடுபட வேண்டும்.

பாடநூல் உள்ளடக்கங்கள் இலங்கையின் அனைத்துப் பிராந்திய வழக்காறுகளையும் மற்றும் கலை கலாச்சாரங் களையும் பிரதிபலிக்க வேண்டும்.

தமிழ்ப் பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்குப் போதிய பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.

தற்கால உலக செல்நெறிக்குரிய நவீன கற்பித்தல் பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.

ஆசிரியர்களிடமும் மாணவர்களிடமும் வாசிப்புப் பழக்கம் விருத்தி செய்யப்பட வேண்டும்.

பல்கலைக்கழகங்களுக்கும் பாடசாலைகளுக்கு மிடையில் நெருங்கிய தொடர்பு பேணப்பட வேண்டும்.

மாணவர்கள் க.பொ.த(உ/த) விலும், பல்கலைக் கழகத்திலும் தமிழை ஒரு பாடமாகத் தெரிவு செய்தல் ஊக்குவிக்கப்படல் வேண்டும்.

மாணவர்கள் தமிழ்ப் பாடம் தொடர்பான இணைப் பாட விதானங்களில் கலந்துகொள்ள ஊக்கப்படுத்தப்படல் வேண்டும்.

பாடசாலைத் தேர்வுகளிலும், பொதுத் தேர்வுகளிலும் வினாத்தாள்கள் சிறப்பாக, பாடம் தொடர்பான அனைத்து விடயங்களையும் உள்ளடங்கும் வகையில் தயாரிக்கப்பட வேண்டும்.

வினாத்தாள்களில் எழுத்துப் பிழைகள் தவிர்க்கப்பட வேண்டும்.

பொதுத் தேர்வு வினாத்தாள்கள் முறையற்ற விதத்தில் முன்னரே வெளியாதலைத் தவிர்த்தல் வேண்டும்.

தேர்வு வினாத் தயாரிக்கும் பேராசிரியர்கள் வினாத் தாள் தயாரிப்புத் தர்மத்தைப் பேண வேண்டும்.

பொதுத் தேர்வும், தேர்வுகள் பாட அறிவு, மதிப் பீட்டறிவு என்பன உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

பாடநூல்கள் உரிய நேரத்துக்குப் பாடசாலை களுக்குக் கிடைக்க வழி செய்ய வேண்டும்.

பாடசாலைகளில் கற்றல்-கற்பித்தலுக்குத் தேவை யான பௌதீக வளங்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

பாடசாலைகளில் நூலக வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

தமிழ்த் தினப் போட்டிகளில் நடுவர்கள் பக்கச்சார் பாகச் செயற்படுதல் தவிர்க்கப்பட வேண்டும்.

மாணவர்களைப் பயிற்றுவிப்பதற்குப் பயிற்சி பெற்ற ஆளணியினரைப் பாடசாலைக்கு வழங்க வேண்டும்,

**உசாத்துணைகள்**

1. 'தமிழ், தமிழ்மொழியும், இலக்கியமும் மற்றும் தமிழ் இலக்கிய நயம் ஆகிய பாடங்களில் பாடநூல்கள், கல்வி வெளியீட்டுத் திணைக்களம், இலங்கை.

2. 'தமிழ், தமிழ்மொழியும் இலக்கியமும் மற்றும் தமிழ் இலக்கிய நயம் ஆகிய பாடங்களின் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகள், தேசிய கல்வி நிறுவகம், இலங்கை.

3. Statistical Hand Book 2005-2007, Research & Development Branch, National Evaluation & Testing Services, Department of Examination, Sri Lanka.

4. Statistical Hand Book 2008-2010, Research & Development Branch, National Evaluation & Testing Services, Department of Examination, Sri Lanka.

5. National Symposium on Reviewing of the performance of School Candidates, G.C.E. (O/L) Examination - 2011, Department of Examination, Sri Lanka.

உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே
பிறப்போ ரன்ன உடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயுமனம் திரியும்
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக என்னாது அவருள்
அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே.

\- புறநானூறு 183